DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -4

| | | |
|---|---|---|
| Name | : அர்ச்சுணன் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 20th day of March 2025.

Accused present.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சேலம், ஏற்காட்டில் ஜெரினா காட்டில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்கிறேன். இறந்துபோன செல்வகுமார் எனக்கு தெரியும். செல்வகுமார் என் மாமா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் என் மாமாவின் மண்டையில் அடித்துவிட்டார். கடந்த 31.12.2017 அன்று என் அக்கா அ.சா.1 எனக்கு போன் செய்தார். மாமாவை அடித்துவிட்டார்கள் மாமா இறந்துவிட்டார் என்று சொன்னார். தகவல் தெரிந்தவுடன் நான் அரசு மருத்துமனைக்கு சென்றேன். அங்குபோய் விசாரித்தபோது அசா.1 மாமாவை தலையில் அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர் இறந்துவிட்டார் என்றும் சொன்னார். பின்பு போலிசார் 3 பேர் வந்து விசாரணை செய்தார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

31.12.2017 அன்று காலை சுமார் 10, 11 மணிக்கு அ.சா.1. எனக்கு போன் செய்தார். எனது அக்கா போன் செய்தபோது நான் ஏற்காட்டில் இருந்தேன். எதிரி பலவருடமாக மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

அவர் நன்றாகத்தான் இருக்கிறார். எதிரி தனக்கு தானே பேசிக்கொண்டும், கத்தி சத்தம்போட்டுகொண்டு இருப்பார் என்றால் சரியல்ல. எதிரி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான்முதல்விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் நான் போலிசாரிடமும் சொன்னேன். எதிரி அ.சா.1 வீட்டிற்கு முன்பு குடியில்லை என்றும் அவர் கன்னங்குறிச்சியில் குடியிருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி அங்கு சட்டிபானை கடை வைத்திருந்தார்.

எதிரி அ.சா.1ன் கணவரை கட்டையால் தாக்கியதால் அவர் இறந்துவிட்டார் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இறந்த செல்வகுமார் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணைஇல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.